**அசல் வழக்கு எண் : 5/2017**

**நாள்: 12.08.2025**

**வாசா.2 தங்கராசு, த/பெ.கண்ணன்**

வாதி மற்றும் பிரதிவாதிகள் ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் வா.சா.2–ன் குறுக்கு விசாரணை:**

1. வாதியானவர் எனக்கு என்ன உறவுமுறை வேண்டும் என்றால் அவர் எனது தாய்மாமன் மகன் ஆவார். எனக்கு வாதியின் நிலத்திற்கு பக்கத்தில் நிலம் உள்ளதா என்றால் வாதியின் நிலத்தில் இருந்து 3–வது நிலமானது எனக்கு சொந்தமானது ஆகும். வாதியின் நிலத்தை ஒட்டி பிரதிவாதிகளுக்கு சொந்தமான நிலம் உள்ளது என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதியான ஜெயவேலின் நிலத்தை ஒட்டி எனக்கு சொந்தமான நிலம் உள்ளதா என்றால் இல்லை.
2. வாதியானவர் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கின் தாவா சொத்திற்கான புல எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதியானவர் எவ்வளவு நிலத்திற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தானது வாதிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் வாதியின் தாய், தந்தையர் தாவா சொத்தை வாதிக்கு அளித்தனர். தாவா சொத்தானது வாதிக்கு பட்டா மூலமாக பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி பட்டாவிற்கான எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு வாதியானவர் எவ்வளவு தீர்வை செலுத்துகிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.
3. பிரதிவாதிகள் வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை குறைவான விலைக்கு அவரிடம் சென்று கேட்டார்களா என்றால் அவ்வாறு கேட்டதாக வாதியான லட்சுமணன் என்பவர் கூறினார். எவ்வளவு நிலத்தை அவ்வாறு விலைக்கு கேட்டார்கள் என்றால் அது குறித்து வாதி என்னிடம் கூறவில்லை. அதைபோல

மேற்படி நிலத்தை எவ்வளவு விலைக்கு பிரதிவாதிகள் வாதியிடம் கேட்டார்கள் என்ற விவரமும் தெரியாது என்றால் சரிதான்.

4. வாதிக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு கிழக்குபுறமும், வடக்குபுறமும் 1-ம் பிரதிவாதியான ஜெயவேலுக்கு பாத்தியப்பட்ட விவசாய நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு வடக்குபுறத்தில் உள்ள 1-ம் பிரதிவாதியின் நிலத்தில் தான் கிணறும், பம்ப்செட்டும் உள்ளது என்றால் சரிதான். வாதியின் நிலத்திற்கு வடக்குபுறத்திலும், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தின் தென்புறத்தில் கிழமேலாக தென்னை மரங்கள் உள்ளன என்றால் சரிதான். அதேபோல வாதியின் நிலத்திற்கு கிழபுறத்திலும், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தின் மேற்குபுறத்தில் தென்வடலாக தென்னை மரங்கள் உள்ளன என்றால் சரிதான். மேற்கூறிய தென்னை மரங்கள் பிரதிவாதிகளால் சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் நடப்பட்டவை என்றாலும், அவை அனைத்தும் பலன்தரும் தென்னை மரங்கள் என்றாலும் சரிதான். தாவா சொத்தின் வடபுறத்தில் உள்ள கிணற்றில் இருந்துதான் பிரதிவாதிகள் தென்னை மரத்தின் ஓரமாக கால்வாய் மூலம் கிழபுறம் உள்ள நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

5. 1-ம் பிரதிவாதியான ஜெயவேல் நிலத்தில் எவ்விதமான குழியும் தோண்டப்படவில்லை என்றால் சரிதான். வாதியான லட்சுமணன் பிரதிவாதிகளுக்கு சொந்தமான தென்னை மரங்கள் அமைந்துள்ள இடத்தை ஒட்டி குழி தோண்டியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் I.A.No.132/2017 ல் Ex.R1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள புகைப்படத்தில் தோண்டப்பட்டுள்ள குழியானது வாதியால் தோண்டப்பட்டதா என்றால் சரிதான். (மேற்படி புகைப்படத்தை சாட்சியிடம் காண்பிப்பதற்கு வாதியின் வழக்கறிஞர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது). மேற்படி குழி தோண்டியுள்ளதால் பிரதிவாதிகளின் நிலத்திற்குதான் பாதிப்பு ஏற்படும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

தென்னை மரங்களுக்கு ஒட்டியவாறு குழி தோண்டப்பட்டுள்ளது என்றால் 2 அடி தள்ளிதான் குழி தோண்டப்பட்டுள்ளது. மேற்படி நிலத்திற்கு உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய வகையில் காட்டு விலங்குகள் ஏதும் வருவதில்லை என்றால் இல்லை. காட்டெருமை, பன்றி ஆகியன வருகின்றன. எனது நிலமும் வனப்பகுதியை ஒட்டி அமைந்துள்ளதா என்றால் ஆம். நான் வாதி தோண்டியுள்ளதை போல எனது நிலத்தை சுற்றி குழி பறித்துள்ளேனா என்றால் இல்லை. வாதியின் நிலத்தை ஒட்டியவாறு வனப்பகுதி அமைந்துள்ளதா என்றால் சுமார் 100 மீட்டர் தொலைவில் வனப்பகுதி அமைந்துள்ளது. வாதியின் நிலத்திற்கு வனவிலங்குகள் வரவேண்டும் என்றால் பிரதிவாதியின் நிலத்தை தாண்டி தான் தென்புறத்திற்கு வரவேண்டும் என்றாலும், அதேபோல கிழபுறத்தில் இருந்து பிரதிவாதிகளின் நிலத்தை தாண்டிதான் வாதியின் நிலத்திற்கு வரவேண்டும் என்றாலும் சரிதான். 1–ம் பிரதிவாதியான ஜெயவேல் என்பவர் தனது நிலத்தில் ஏதேனும் குழி பறித்துள்ளாரா என்றால் இல்லை. அப்பகுதியில் உள்ள வேறு நபர்கள் யாரேனும் அவர்கள் நிலத்தில் வாதியை போல குழி தோண்டியுள்ளனரா என்றால் இல்லை. வனத்தில் இருந்து காட்டெருமை அல்லது பன்றிகள் அங்கு பிரவேசிக்கும் என்றால் அங்குள்ள அனைத்து விவசாய நிலங்களும் பாதிக்கப்படும் என்றால் சரிதான். வாதியானவர் காட்டெருமை மற்றும் பன்றிகள் தனது நிலத்திற்கு வருவதால் தான் குழி தோண்டியுள்ளார் என நான் கூறுவது தவறு என்றாலும், வாதியானவர், பிரதிவாதிகளுக்கு தொல்லை தரவேண்டும் என்பதற்காகவும், பிரதிவாதிகளின் தென்னை மரங்கள் சாய்ந்து விடவேண்டும் என்பதற்காகவும், மேற்படி மரங்கள் காய்ந்து விடவேண்டும் என்பதற்காக தான் குழி தோண்டியுள்ளார் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் தங்களது நிலத்தில் வரப்பில் இருந்து 2 அடி தள்ளிதான் தென்னை மரங்களை வைத்துள்ளனர் என்றாலும், வாதியானவர் பிரதிவாதிகளின் நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து குழி தோண்டியுள்ளார் என்றாலும் சரியல்ல. வாதியானவர் தனது நிலத்தில் பிரதிவாதிகளுக்கு தொல்லை அளிக்க

வேண்டும் என்ற தவறான எண்ணத்தில் தனது நிலத்தில் தானே குழிகளை தோண்டி கொண்டு பிரதிவாதிகள் மீது பொய்யான சங்கதிகளை கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியானவர் எனது தாய்மாமன் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக இவ்வழக்கில் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SARANYA M

Digitally signed by SARANYA M
Date: 2025.08.12 16:18:54 +0530